பக்கங்கள் பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 19 ஞாயிற்றுக்கிழமை (01-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 56

## ஐ.தே.க. அலுவலகம் மீது கண்டியில் கிரனேட் வீச்சு

கொழும்பு, பெப். 1

கண்டி நகரில் டீ.எஸ். சேனநாயக்கா வீதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது நேற்று அதிகாலை 2.40 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

வாகனம் ஒன்று அந்த வீதியைத் தாண்டிச் சென்றபோது அதிலிருந்து அலுவலகம் மீது இரு கிரனேட்டுக்கள் வீசப்பட்டன. இதனால் அலுவலகத்தின் கண்ணாடிகள் சிதறின.

அங்கிருந்த தொலைபேசிக் கூடமும் சேதமடைந்தது.

இச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-21)

## தலதாமாளிகை முன் பிக்குகள் நேற்று சத்தியாக்கிரகம்!

கண்டி, பெப். 1

கண்டி தலதாமாளிகை மீதான குண்டுத் தாக்குதலைக் கண்டித்து நேற்று புத்தபிக்குகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் சத்தியாக்கிரகம் இருந்தனர்.

குண்டுத் தாக்குதலைக் கண்டித்து நேற்று தென்னிலங்கையில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது தெரிந்ததே.

இதனையொட்டியே சத்தியாக்கிரகமும் ஒழுங்கு செய்யப்பட்டது.

சுமார் ஆயிரத்து 500 பிக்குகள் உட்பட 5 ஆயிரம் பேர் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

★ எதிர்காலத்தில் தலதாமாளிகையில் சிங்களவர்கள், பௌத்தர் தவிர வேறு எவரையும் வேலைக்கு அமர்த்தக் கூடாது.

★ ஜனவரி 25 ஆம் திகதி ஒவ்வொரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர பொன் விழாவை யொட்டி

# கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு!

## தமிழர்கள் தங்கியுள்ள பகுதிகளை சுற்றிவளைத்துத் தேடுதல்

கொழும்பு, பெப்ரவரி 1

சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டங்கள் கொழும்பு கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் நடைபெறவுள்ளதை யொட்டி கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. வீதிக்கு வீதி பொலிஸாரினதும், படையினரதும் சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. வாகனங்களில் வருவோர் மற்றும் சந்தேகத்திற்கு இடமானவர்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கண்டியில் நடைபெறவிருந்த சுதந்திரதின பொன் விழாக் கொண்டாட்டங்கள், தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெறவுள்ளது தெரிந்ததே.

கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். இரவு-பகல் என 24 மணி நேரமும் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர். தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளில் தினமும் சுற்றிவளைப்புக்களும் தேடுதல்களும் இடம் பெற்று வருகின்றன.

சந்தேகத்திற்கு இடமானவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். (இ-5)

## யுவதி உட்பட 14 தமிழர்கள் பம்பலப்பிட்டியில் கைது!

### களுத்துறைச் சிறைக்கு அனுப்பப்பட்டனர்

கொழும்பு, பெப். 1

பம்பலப்பிட்டியிலுள்ள விடுதி ஒன்றில் கடந்த 29 ஆம் திகதி ஒரு யுவதி உட்பட 14 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த 14 பேரும் தற்போது களுத்துறை சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தை மயூரபதி ஆலயத்துக்கு வழிபாடு செய்ய வந்த தமிழ் இளைஞர்கள் சிலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியிலும் இதே நாளில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுதந்திரதினப் பொன் விழாக் கொண்டாட்டங்கள் கொழும்பில் நடைபெறுவதையொட்டி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [இ-5]

## குருநகர் கடலில் பொலிஸாரின் சடலம்

யாழ்ப்பாணம், பெப். 1

குருநகர் பகுதிக் கடலில் காணப்பட்ட பொலிஸார் ஒருவரின் சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸ் சீருடையுடன் ஒப்படைக்கப்பட்ட இச் சடலம் பிரேத பரிசோதனையின் பின் பொலிஸாரினால் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 28 ஆம் திகதி இரவு குருநகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பலியான

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களுக்கு ஈ.பி.டி.பி. நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

கடந்த உள்ளூராட்சித்தேர்தலில் தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து ஈ.பி.டி.பி. அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில்நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு கணிசமான வாக்குகளை யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் அளித்திருப்பது எமது சேவைக்கும் கொள்கைகளுக்கும் கிடைத்த அங்கீகாரமாக நாம் கருதுகிறோம்.

யாழ். குடாநாட்டில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 43 சதவீதமான வாக்குகள் எமக்கு கிடைத்திருப்பது உற்சாகத்தை அளிக்கிறது.

எமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்தகாலங்கள் போலவே எதிர்காலத்திலும் உறுதியுடன் எமது மக்களுக்காக சேவையாற்றவும் அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் எமது கட்சி முனைப்புடன் செயலாற்றும். எமக்கு மக்கள் அளித்த அங்கீகாரமும் ஆதரவும் எமது செயல்பாடுகளுக்கு மேலும் உத்வேகத்தை அளித்திருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தலில் சில கட்சிகள் மக்களின் வறுமையை பயன்படுத்தி தமக்கு வாக்குச் சேர்க்க கையாண்ட உத்திகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பு சம்பந்தமாக 15 பொலிஸார் மீது விசாரணை

கண்டி, பெப். 1

கடந்த வாரம் கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக கண்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 15 பொலிஸாரை புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர்.

குண்டு ஏற்றப்பட்ட லொறி தலதா மாளிகையை நோக்கி வரும்போது பொலிஸார் என்ன நடவடிக்கை எடுத்தனர் என்பது குறித்து விசாரிக்கப்பட்டுவருகிறது.

குறித்த லொறி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் எனக் கூறப்படும் பொலிஸ்காரரும் விசாரிக்கப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்புச் சம்பவம் இடம் பெறுவதற்கு முன்னர் தலதா மாளிகையை அண்டிய பகுதியில் எத்தனை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறித்தும் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டிராஜவீதியில்போடப்பட்டிருந்த தண்டவாளக் கட்டைகள் யாரால் அகற்றப்பட்டன என்பது குறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறது. (இ-10)

## டிரக் மீது றொக்கட் தாக்குதல்; 4 படையினர் பலி; அறுவர் காயம்!

வவுனியா, பெப். 1

வவுனியா, மன்னார் வீதியில் சென்று கொண்டிருந்த படையினரின் டிரக் வாகனம் மீது 17 ஆம் கட்டைக்கு அருகில் வைத்து விடுதலைப் புலிகள் றொக்கட் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலின் போது நான்கு படையினர் கொல்லப்பட்டனர். ஆறு படையினர் காயமடைந்தனர்.

டிரக் வண்டி பலத்த சேதமடைந்துள்ளதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-21-164-9)

## புலிகள் தடை குறித்து இன்னும் வர்த்தமானி அறிவிப்பு இல்லை

கொழும்பு, பெப். 1

விடுதலைப் புலிகள் தடை உத்தரவு குறித்து அரசு தீர்மானித்துள்ள போதிலும் இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.

தடை உத்தரவை மீறுபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நாடு திரும்பிய பின்புதான் இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளிவரலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிநதியா நகைமாட ஆதரவில்
பொங்கல் தினத்தன்று (14 - 01 - 98)
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம்
நடத்திய
உழவர் விழாவுக்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசுக்கான சீட்டிலக்கம் — 1631
இரண்டாம் பரிசுக்கான சீட்டிலக்கம் — 1537
மூன்றாம் பரிசுக்கான சீட்டிலக்கம் — 0136

ஆறுதல் பரிசு பெற்ற சீட்டிலக்கங்கள்
1. 894 2 670 3. 1384
4. 659 5. 1325

இவ்விலக்கங்களுக்கு உரியவர்கள் 08 - 02 - 1998 ஆம் திகதிக்கு முன்னதாக ஆதாரத்துடன் வந்து யாழ். சிறி நதியா நகைமாடத்தில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**சிறி நதியா நகைமாடம்,**
இல. 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(என்றும் தரமான தங்க நகைத் தெரிவுக்கு)
(சி/2767)


அருட்திரு தேவ தேவன் போற்றி
அவர் தம் தூய நாமம் போற்றி
அவர் மகன் யேசுக் கிறிஸ்து போற்றி
அவர் தம் விலையில்லாக் குருதி போற்றி
தேவ நற் கருணையில் யேசு போற்றி
தேற்றிடும் தூய ஆவி போற்றி
தேவ நற் கருணையில் யேசு போற்றி
தேற்றிடும் தூய ஆவி போற்றி
தேவனின் அன்னை கன்னிமரி போற்றி
அவள் திரு மாசில் உற்பவம் போற்றி
அவளது மாண்புறு விண்ணேற்பு போற்றி
அவளது புனித நாமம் போற்றி
அவள் திருத் துணைவர் சூசை போற்றி
தூதரிற் புனிதரிற் தேவன் போற்றி.

— ஓர் அடியாள்

(சி/2769)


## கண்ணீர் அஞ்சலி

**அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம்**

எமது சக மாணவி
செல்வி சிவகாமசுந்தரியின்
தந்தையாரின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அவரது துயரில் கலந்து கொண்டு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

முழுநேர மாணவர்கள்
H. N. D A III ஆம் வருடம்
உயர் தொழில் நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம். (53028)

## ஓராண்டு நினைவலைகள்



**செல்வி மகாலிங்கம் உதயா**

மலர்வு: 05 — 01 — 1969
உதிர்வு: 11 — 02 — 1997
திதி: 01 — 02 — 1998

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாத்துயர் கொண்டு
வாடுகின்றோம்
நூறாண்டு ஆயிடினும்
மாறாது நின்னினைவு
ஓராண்டு நிறைவதனில்
தேறாது வாடுகின்றோம்!

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி,
உற்றார், உறவினர்.

சி. மகாலிங்கம்
4/115, செம்மணி றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம். (53024)

## மரக்கறி விதை விநியோகம்

நெடுந்தீவு, பெப். 1

நெடுந்தீவில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஊடாக இங்குள்ள தோட்டப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு வேலணை கமத்தொழில் நிலையம் மரக்கறி விதைகளை வழங்கியுள்ளது.

இவை இங்குள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(ஐ-111)

## 50 ஆண்டுகள் நிறைவு

திருநெல்வேலி, பெப். 1

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இவ் வருடம் 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு பொன் விழாவை எதிர் வரும் மே மாதத்தில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

( -185)

## ஓய்வுபெறுகிறார்

திருநெல்வேலி, பெப். 1

யாழ். மாநகர சபையில் மின்சார பொறியியலாளராக கடந்த 16 வருடகாலமாக கடமையாற்றி வரும் வே. நவரத்தினராசா எதிர்வரும் 10ஆம் திகதியன்று பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். யாழ். மாநகர சபையில் நீர்விநியோகவேலைபொறியியலாளராகவும், கடந்தமூன்று வருடங்களாக கடமையாற்றி வரும் இவர் பலதடவைகள் பதில் மாநகர ஆணையாளராகவும் தமது பதவிக் காலத்தில் பணியாற்றியுள்ளார். ஓய்வு பெற்ற பின்பு ஜெர்மன் தொழில் நுட்ப (ஜீ.ரீ.இசற்) நிறுவனத்தின் யாழ். மாநகர பகுதிக்கான நீர்விநியோகப் பொறுப்பதிகாரியாக இவர் கடமையாற்றவுள்ளார்.

(ஐ-185)

## நீர் விநியோகம் விஸ்தரிப்பு

திருநெல்வேலி, பெப். 1

யாழ். மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகம் மேலும் சில பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மூஸ்லிம் வட்டாரம், சுண்டுக்குளி, மருதடி ஆகிய பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் பொறியியலாளர் வே. நவரத்தினராசா தெரிவித்தார்.

(ஐ-135)


நெல்லியடி
**மஹாத்மா வெண் திரையில்**
30 - 01 - 98 முதல்
சரத்குமார், தேவயானி
நடித்த
**சூரியவம்சம்**
02 - 02 - 98 முதல்
மம்முட்டி - தேவயானி
நடித்த
**மறுமலர்ச்சி**
காட்சிகள்:- 10-30, 2-30
(சி/2765)



**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
01-02-98 (இன்று) முதல்
ரஜனிகாந்த், மீனா
நடித்த
**"முத்து"**
பகல் நேரம்
9-30, 12-30, 3-30
(52705)


கண்டி குண்டு வெடிப்புச் சம்பவம்

## "பளேகாட் சிவா" என்பவர் நாட்டை விட்டு தப்பினாராம்

கொழும்பு, பெப். 1

கண்டி குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் தலதா மாளிகை கட்டடத் திருத்த ஒப்பந்தகாரருமான "பளேகாட் சிவா" என்பவர் நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டார் எனப் பாதுகாப்புத் துறையினர் சந்தேகிக்கின்றனர் என 'திவயின' நாளிதழ் தெரிவிக்கிறது.

குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒப்பந்தகாரரும் அவரது உதவியாளரான ராஜு என்பவரும் காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

"பளேகாட் சிவா" என்பவர் கண்டியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவரின் மகனின் நெருங்கிய நண்பர் எனவும் அவர்கள் இருவரும் ஓர் அணியில் றகர் விளையாடினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் பளேகாட் சிவாவும் அவரது உதவியாளரும் அந்த இடத்திற்கு வந்து நிலைமையை அவதானித்த பின்னரே காணாமற்போயுள்ளனர் எனப் பாதுகாப்புத் துறையினர் சந்தேகிக்கின்றனர்.

(ஐ-10)


**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
(தேசிய பாடசாலை)
**யாழ்ப்பாணம்**
**க.பொ.த. உயர்தரம் 2000 கல்வியாண்டு**
**வகுப்புகளுக்கான அனுமதி**

மேற்படி வகுப்புகளுக்கான கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித பாடநெறிகளுக்கு கல்லூரியால் ஆண் பெண் இருபாலாரிடமும் இருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

அலுவலகத்தில் பெறும் விண்ணப்பப் படிவத்தில் 09-02-98ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். கணித, விஞ்ஞான, தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் 1½ மணித்தியாலங்களைக் கொண்ட தேர்வுகள் 10 - 02 - 98 அன்று காலை 9 00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

- அதிபர்

(சி/2756)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி புனிதவதி நவரட்ணம்

திருமதி புனிதவதி நவரட்ணம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் நவரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமப்பிள்ளை அன்னலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், ஜெயத்திலகன் (இலங்கை வங்கி - ஸ்ரான்லி வீதி), ஜெகதீசன் (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விசாலாட்சி, டொலிசந்திரவதி, குலேந்திரராணி ஆகியோரின் மாமியாரும், சேயோன், ஷப்ரினா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற புஷ்பவதி மற்றும் யோகலிங்கம் (மலேசியா), தனபாலசிங்கம் (கொழும்பு), சத்தியபாலதேவி (அமெரிக்கா), சத்தியமூர்த்தி (மலேசியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 2-2-98 பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
ந. ஜெயத்திலகன்
(மகன்)

92, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(சி/2768)

### திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம்

இளவாலை வடக்கைச் சேர்ந்த திருமதிகமலாம்பிகை (கமலா) சுப்பிரமணியம் 31 - 01 - 98 சனிக்கிழமை காலை காலமானார்.

இவர் மு. சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற புகையிரத தலைமைக் காவலர் — Head Guard) அவர்களின் துணைவியாரும், திருமதிகள் சாந்தி (பிரதிப்பணிப்பாளர் இந்துகலாசாரத்திணைக்களம்), சுகந்தா (ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), வசந்தி (கனடா), ரேணுகா (டென்மார்க்), செல்விகள் ஈஸ்வரி, கவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், நாவுக்கரசன், கிருபானந்தராசா, புஷ்பராசா, குகநேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வே. மகாதேவன் (சிங்கப்பூர்), குணசிங்கம் (லண்டன்), அமரர் பாலசிங்கம், தர்மராசசிங்கம் (நைஜீரியா), நவரட்ணசிங்கம் (கனடா), திருமதிகள் அமரர் சிவபாக்கியம், செல்வபாக்கியம் சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தமக்கையாரும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் 98-02-01 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. சுப்பிரமணியம்
(கணவர்)

இளவாலை வடக்கு,
இளவாலை.

(49939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்திர சம்மதமான சித்த மருந்துகள்

# பல நோய்களைத் தீர்க்க வல்லன

சித்தர்கள் ஆராய்ந்து அமைத்த வைத்தியமே சித்த வைத்தியம். இதுசாகாக்கலை எனப்படும். இவ்வைத்தியம் மிகவும் பூர்வீகமானது. சித்தர்கள் உடலினுள்ளே உயிர் ஒன்று இருப்பதையும், அவ்வுயிருக்கு ஆதாரமாக இறைவனொருவனிப்பதையும் உணர்ந்தனர். இறைவனை உயிர் தான் அறிய முடியும். உயிரும் உடம்போடு கூடியிருந்தாலே அவ்வாறு அறிய முடியும். ஆதலால் உடம்பை என்றும் இளமையுடனும் சுகத்துடனும் நிலைக்கச் செய்தாலே இறைவனை அடையலாம் என்னும் முடிவுக்கு வந்தனர். இதற்கு ஏற்ற வழிகளை ஆராய்ந்தனர். அதன் வழியாகவந்த பயனே சித்தர்களாலாக்கப்பட்ட சித்த வைத்தியம்.

## தெய்வத் தன்மை உள்ள சித்தர் ஆக்கி அளித்த சிறப்புள்ளவை

இதனை—

''உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர் வளர்த்தேனே'

என காயசித்தி அத்தியாயத்தில் திருமூலர் கூறினார். இச் சிறந்த வைத்தியத்தை ஆக்கிய சித்தர்களின் பெருமை அளப்பரியது. இவர்கள் தெய்வத்தன்மை பெற்றவர்கள் என்பதை திருமந்திரம்

சித்தர் சிவத்தை கண்டவர் சிருடன்
சுத்தா சுத்தத்துடன் தோய்ந்தும் தோயாதவர்
என்றும

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
என்றும் — சொல்கிறது.

சூரியகாந்தி உதயன் ஆயிரம் சிறப்பகம்

இவர்கள் மந்திரம் மருந்து, ரசவாதம், ஞானம் யோகம் முதலியதுறைகளிற் கரை கண்டவர்கள் முக்காலமும் உணர்ந்து எக்காலமும் குன்றா இளமையோடிருக்கும் அழிவில்லாத வச்சிர யாக்கை பெற்றவர்கள்.

அற்புதங்கள் செய்யும் அட்டமாசித்திகளையும் கைவரப்பெற்றவர்கள் பஞ்சலோகங்களைப் பசுந்தங்கமாகவும் தூரத்துக்காட்சி தொலைவிலுணாத வாஞ் சத்திகளையும் பெற்றவர்கள் இறவாநிலை எய்திச் சமாதியிருந்த சிவன் முத்தர்கள் இன்னும் சமாதியிலிருந்து மக்களுக்கு அருள் பாலித்து வருபவர்கள்.

இத்தகைய தெய்வத் தன்மை பெற்றவர்களால் ஆக்கி அளிக்கப்பட்ட மருந்துகள் எத்தன்மையாயிருக்குமென்பதை உங்கள் சிந்தைக்கு விட்டுவிட்டு அம்மருந்துகள் தாம் எவை என்பதை ஆராய்வோம்.

### நோய்கள் 4448

இம்மருந்துகள் மனிதருக்கு வரும் கருவிலுறு நோய்கள் காலவரையின்றி வருந்தும் கொடுநோய்கள் அவமிருந்து நோய்கள் மறுநோய் களாதியாம் 4448 நோய்களையும் போக்கி வாழ்நாளைக் கூட்டுவனவாம். இவை மக்களுறை, தேவுறை, குருறை என மூவகைப்படும். குருறை என்பது சத்திர வைத்தியமாம். இது அறுவை முதல் மகப்பேறு வித்தல்றான 23 வகையாகும்.

இவ்வைத்தியத்தில் பிரதான மருந்துகளாகிய மயக்குகரணி சல்லியகரணி, சந்தான கரணி சஞ்சீவகரணியாகிய நாலும் மறைந்து விட்டன. மயக்கு கரணியால் உணர்வறச் செய்யின் எவ்வளவு நேரஞ் சென்றாலும் அறுவையை முடித்து சஞ்சீவக கரணியாலுணர்வுறச் செய்யலாம்.

இந்நான்கு மருந்துகளும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த போசராசன் காலத்தில் இருந்தனவென அபிதான கோசம் என்னும் நூல் கூறுகிறது. மக்களுறையும் தேவுறையும் இன்னும் ஒருவாறு இருந்து வருகின்றன: மக்களுறை மூலிகை வைத்தியம் இதில் 33 வகையான மருந்துகள் உண்டு. இவ்வுறையிலே 6000 க்கும் அதிகமான மூலிகைகள் மருந்தாக எடுக்கப்படுகின்றன. இவற்றிலே தீர்க்காயுளை அளிப்பனவும் ரசகுளிகைக்குச் சாரணை கொடுப்பதற்குரியனவும் 1008, இவற்றுள் தீர்க்காயுளோடு இளமையை அளிப்பன 64. இவற்றுள் சிறந்தன—23.

இவைகளுஞ் சிறந்தன 10. இவையெவை யெனில்:

'குறிநின்ற மூலிகை கூறினோமெட்டெட்டு
தறிநிறை மூலிகை
தான திற்பத்துண்டு
செருக்குங் கருநெல்லி
சேர் சோதி விருட்சம்
சுருக்கும் கொடிவேலி
சுற்றாமரையெனவே
என்னுங் கருத்தாமை
யேகும் பொற்சீந்தில்
சொன்ன கருநீலி சொன்னத் திராயுடன்
சன்ன வாமுண்டகம் சாயா விருட்சம்
உன்னாய மூலி யொடுங்கிய பத்துமே'
என்று மச்சமுனி கூறினார்.

தேவுறையில் பற்பம் சுண்ணம் செந்தூரம் செயநீர் தீநிர், திராவகம் பதங்கம் முதவிய 12 வகையரன மருந்துகளுள. அவை பிரதான மூலிகைகள், உப்புவகை 26, பாடாணம் 64, உபரசம் 120, லோகங்கள் 9, இரத்தினங்கள் 9, இவற்றுள் பொன்னாம் சத்துக்கள் 112, உடற்பொருட்கள் 112 முதலியவைகளால் செய்யப்படும்.

இவற்றைவிட கற்பமருந்துகள் 108 உண்டு. இவற்றுக்கெல்லாம் மேலாக சகல மருந்துகளையும் குற்றங்கள் போக்கிக் குணம் பல வளிக்கும் குருமருந்து ஒன்று இருக்கிறது. இதுவே மூப்பூ என்னும் தெய்வ மருந்து. இம் மருந்து குறிப்பிட்ட அளவுப் படி எல்லா மருந்துகளிலும் சேரும் போது அவை எல்லாம் நோய்களைப் போக்கி இளமையளிப்பனவாகி விடுகின்றன. ''மூப்புவறிந்தார் மூப்பினையகன்றார்'' என்று சொல்லப் பெற்ற சித்தர்களால் மாத்திரம் அறியப்பட்ட அரும் பெரும் மருந்து இதுவே.

சித்த மருந்துகளில் பிரதானமாகக் கவனிக்கப் படுவது சுத்தி. சுத்திவகை கண்ணென மதிக்கப்படுகிறது. இச்சுத்தி மூவகைப்படும். பல பொருள்களோடு கலந்திருக்கும் ஒருபொருளைத் தனியாக பிரித்தெடுப்பது ஒன்று. அத் தனிப் பொருளின் உடம்பிற்கேதிகாத தீய குணங்களை யகற்றி நற்குணங்களை மிகச் செய்தல் இன்னொன்று. புகைந்தோடிப் போனவற்றை அவ்விதம் ஓடிப்போகாது அக்கினியை வென்று நிற்கும் படி செய்வது மற்றொன்றாகும்.

### சுத்தியும் பரிசோதனையும்

சுத்தி பெற்ற மருந்துகள் மருந்தாக்கப்படும் போது அவை பஞ்சபூத அடிப்படைத் தத்துவத்

சித்த வைத்திய கலாநிதி
வே. குகமூர்த்தி

தில் அமைய வேண்டும். மருந்துப் பொருள்கள் யாவும் பஞ்ச பூதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் சரக்கிற்கும் சத்துருமித்துரு உண்டு. ஒரு சரக்கு மருந்தாகும் போது அது சத்துருவால் கொல்லப்பட்டு மித்துருவால் எழுப்பப்பட வேண்டும். இதில் விதிமுறைப்படி குருவும் சேரல் வேண்டும். இவ்விதி தவறி முடிக்கப் பெறும் மருந்துகள் மருந்தல்ல.

மருந்தானபின் அம்மருந்துகளுக்கு பரீட்சையுண்டு. அச்சோதனையில் வெற்றி பெற்ற மருந்துகளே சாத்திர சம்மதமான மருந்துகளாம். இவைகளின் பிரயோகத்தால் குறித்த நோயகல்வதோடு சரீரத்திலுள்ள ஏனைய நோய்களுமகன்று ஆயுள் விருத்தியும் உண்டாகின்றது.

இத்த மருந்துகளால் சகல நோய்களையும் போக்கலாம். இறைமைக்கேற்ப வேண்டிய அளவுக்கு ஆயுளை விருத்தி செய்யலாம்.

சித்த மருந்துகளில் இரசம், தங்கம், அப்பிரகம், செம்பு, நாகம், வங்கம், அயம், காந்தம், இரத்தினங்கள் என்பவைகவே பிரதான மருந்துகளாம். இவற்றுள் தலையாயது ரசமே. ரசத்தில் 5 வகை உள. இவற்றுட் சிறந்தது துரசேந்திரன் என்னும் ரசமாகும். இது கிடைப்பது கஷ்டம், சாதாரண ரசமே இங்குள்ளது. இது சாஸ்திர சம்மதமாய்ச் சுத்தித்து குருதீட்சணியஞ் செய்து மேலும் செய்யும் மகிமையத்தால் அது பால சூரியனுக்கு ஒப்பான செந்நிறம் பொருந்திய ரசமாகும். லிங்கத்திலிருந்து பிரித்தெடுத்த வாலை ரசத்தையும் செந்நிறமாக்கி எடுக்கலாம். இந்த ரசங்கள் மணியானால் மந்திரம், மருந்து, வாதம், யோகம், ஞானம், நோய் நீக்கம் இளமையாகவும் எளிதிற் சித்திக்கும் என்பது சித்த வைத்தியத்தின் முடிவு.

★

---

## எண்ணியலை ஆராயும் பயனுள்ள நூல்

ஆன்மீக இலக்கியம் படைத்துப் பிரபலமான மூளாய் அருணாசலம் தனது வெளியீடான ''எண்களில் உங்கள் அதிர்ஷ்டம்'' என்னும் நூலுக்கு வரைந்த முன்னுரையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

அண்ட வெளியில் இடையறாது சுற்றிக் கொண்டிருக்கும் ஒன்பது கிரகங்களே மண்ணுலகையும் அதில் அடங்கியுள்ள உயிரினங்களையும் ஆட்சி செய்கின்றன.

**நூல்: எண்களில் உங்கள் அதிர்ஷ்டம்**
**ஆசிரியர்: மூளாய் அருணாசலம்**

இந்தத் தத்துவத்தைச் சோதிடர்களும், விண்வெளி கண்ட விஞ்ஞானிகளும், வான்வெளி ஆராய்ச்சியாளர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அதே போன்று 1 தொடக்கம் 9 வரையிலான எண்களே கணித உலகை ஆட்சி புரிகின்றன என்ற உண்மையும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

கிரகங்களை எண்களால் குறிக்கும் ஒரு கலை எண் இயல். மனிததேகம் எடுத்துப் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணால் ஆளப்படுகிறார்கள். அந்த எண் எது என்று அறிந்து அதன்

**நூல் வரிசை**

சக்திகளை வளர்த்தால் வாழ்க்கையில் அதிர்ஷ்டமும் மகிழ்ச்சியும் உண்டாகும். ஒன்பது கிரகங்களைச் சாந்தப்படுத்தி அவைகளின் தோஷங்களை நீக்கும் இயல்பு நவரத்தினங்களுக்கு உண்டு—

பாடசாலையில் நாம் எண்களைக் கூட்டவும், கழிக்கவும், பெருக்கவும், பிரிக்கவும் கற்றுக் கொண்டோம். ஆனால் எண்களின் சக்தியையோ அவற்றின் குணங்களையோ அறிந்திருக்கவில்லை—

உங்கள் எண் எண்கள் பெயரை அதிர்ஷ்டம் உள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

---

## காந்தி அடிகளின் வாழ்க்கை தொண்டு நிலையமாக விளங்கியது

மகாத்மா காந்தியின் 50 ஆவது சிரார்த்த தினம் கடந்த வெள்ளிக்கிழமையாகும். அவரது நினைவாக இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

இந்திய நாடு ஆங்கில ஏகாதிபத்தியத்துள் அடங்கிக் கிடந்த காலம்; பாரத மக்கள் அடிமைத் தளையில் அகப்பட்டு அல்லல் உற்ற நேரம் அகிம்சாமூர்த்தி; அண்ணல் காந்தியடிகள் அவதரித்தார்.

பறங்கியனுக்குப் பாரதீனப் பட்டுக் கிடந்த பாரத நாட்டை மீட்டிட அல்லும் பகலும் பாடுபட்டார்; இந்திய இன ஒற்றுமைக்காகத் தன்னையே ஈந்தார்; உலக மக்களின் உள்ளங்களில் உறைவிடமானார்; உலக உத்தமனானார்; மகாத்மா ஆனார்.

மகாத்மா மாந்தருள் ஒரு தெய்வம்; கண்கண்ட தெய்வம். [illegible] படைத்த உத்தமத் தெய்வம்; மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிப் புதிய வாழ்க்கைத் தந்து அடிமைத் தலையை அகற்றியதெய்வம்;

நாட்டு மக்களிடையே நம்பிக்கையை ஊட்டி நானிலத்தில் நன்மதிப்பைப் பெற்ற தெய்வம். குண்டல மணிந்த குருமாரைப் போலில்லாமல்



குறுந்தடி பிடித்துவானி அகிம்சையை ஆயுதமாகக் கொண்ட தழை வாழ்வை நடத்திய அன்புத் தெய்வம். இன்னா செய்யாமையாகிய குறிக்கோளையே பொருளாகப் போற்றி, அதன் காரணமாகவே உயிரிழந்து உலகமெல்லாம் புகழ்பெற்ற உண்மைத் தெய்வம் காந்தியடிகள் என்பது வெள்ளிடைமலை.

கடவுளைக் காண்பதற்கு ஒரே வழியுண்டு; அவரை

அ. பொ. செல்லையா

அவரை படைப்பில் காண்பதே வழி; நொய்த மனத்தோனை மகிழ்வித்து மக்கள் எல்லோருக்கும் சேவை செய்வதே கடவுளை அடையும் வழி; மக்களுக்குத் தொண்டு செய்வதே கடவுள் வழிபாடு என்று உளத்தில் உண்மை, வாயில் வாய்மை, செயலில் மெய்மை என்பவைகளைக் கைக்கொண்டு வாழ்ந்த மகானே காந்தியாவார்.

அரசியல் சிக்கல்களை உடைத்துப் பழுது பார்க்கும் அறிவாற்றல், ஏழைகளைக் கண்டு இரங்கும் இரக்க உணர்வு, குழந்தைகளோடு விளையாடும் கலையுணர்வு,

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
பரராஜசேகரப் பிள்ளையார் துணை

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான தைத் திங்கள் 19 ஆம் நாள் (01 - 02 - 1998) ஞாயிற்றுக்கிழமை பகல் 10 - 00 மணி முதல் 11 - 05 மணி வரையுள்ள சுப வேளையில்

| | |
|---|---|
| எமது திருநிறை செல்வன் | எமது திருநிறை செல்வி |
| சுந்தரவடிவேல் | ஜானகி |
| (கனடா) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

தென் இந்தியா-திருவானைக்கா A. K திருமண மஹால் மண்டபத்தில் திருமாங்கல்ய வைபவம் நடைபெறவுள்ளது. தாங்கள் யாவரும் மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
தங்கள் நல்வரவை விரும்பும்:

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| சு. தட்சணாமூர்த்தி | கதிர்காமத்தம்பி |
| (இளைப்பாறிய ஆசிரியர்) | இணுவில் மேற்கு, |
| சிவன்கோயிலடி | இணுவில். |
| இணுவில் கிழக்கு, | |
| இணுவில். | |

(சி/2763)

## வாழ்த்துகின்றோம்

யா/சங்கானை
சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
1997 ஐந்தாம் ஆண்டு
புலமைப்பரிசில் பரீட்சையில்

சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களையும் இப்பெருமைக்கு வித்திட்ட அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் பாடசாலை நிறுவுனர் நாளாகிய இன்று பாராட்டுவதில் பெருமிதம் அடைகின்றோம்.

செல்வி P. தேவரஞ்சனா
செல்வன் R. கஜேந்திரநாதன்
செல்வி N. தர்சினி — செல்வி K. கிருஷாந்தி
செல்வி D. கனிஷ்டஆர்த்தி — செல்வி S ஜனந்தி
செல்வி K. காயத்திரி — செல்வி S. ரேகா
செல்வன் T. மணிவண்ணன்

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
பழைய மாணவர் சங்கத்தினர்,
மாணவர்கள்.

(53018)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

அண்மையில் வெளிவந்த
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
பரு./ மாதனை
மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை
மாணவிகளான

இராமச்சந்திரன் தமயந்தி
நடராசா காயத்திரி
பரராசசிங்கம் மயூரி

ஆகியோரை வாழ்த்துவதோடு சித்தியடைவதற்கு உறுதுணையாகவிருந்த அதிபர் எஸ். செல்வராசாவுக்கும் சக ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

மாதனை சனசமூக நிலையத்தினரும்,
மாதனை மகளிர்
அபிவிருத்திச் சங்கத்தினரும்.

மாதனை,
பருத்தித்துறை.

(சி-2761)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி சோ. கனகாம்பிகையின்
அன்புத் தந்தையார்
க. வி. சோமசுந்தரம் அவர்கள்

விசுவமடுவில் 1998 – 01 – 19 அன்று சிவபதமடைந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ மயிலிட்டி வடக்கு,
கலைமகள் மகாவித்தியாலயம்,
காங்கேசன்துறை.

(52976)

# தீவகப் பகுதியில் இயங்காது உள்ள பாடசாலைகளைத் திறக்க முயற்சி

நெடுந்தீவு, பெப். 1

தீவகத்தில் உள்ள 66 பாடசாலைகளில் தற்சமயம் 33 பாடசாலைகளே இயங்கி வருகின்றன. ஏனைய பாடசாலைகளையும் இயக்குவதற்கு விரைவில்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வேலணைசேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயத்தில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் பழைய இடத்திற்கு அதனை மாற்றுவது குறித்து சம்பந்தப் பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க இருப்பதாக யாழ். வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா தெரிவித்தார்.

தீவகச் சிறார்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கருத்தரங்கில் இப்பகுதியின் கல்விவளர்ச்சி, ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தற்சமயம் இடிந்து சேதமுற்றிருக்கும் பாடசாலைகளைத் திருத்தியமைக்க பாடசாலை வேலைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு தேவையான நிதியுதவியைப் பெற்றுத் தருவதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சிறிய அளவிலான நூலகங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும், சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து எட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றக் கோரிக்கைகள் குறித்து கவனத்தில் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கு வேலணை வைத்திலிங்கம் துரை சுவாமி மகாவித்தியாலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

(ஐ-111)

### தராசுப் படிகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, பெப்.1

யாழ். செயலகத்தில் பிரதி புதன்கிழமைகள் தோறும் நிறுவைகள்- அளவைகள் திணைக்களத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2மணி வரை நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும்.

இச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி சந்தைகள், வியாபார நிலையங்கள், மில், பேக்கரி ஆகியவற்றின் உரிமையாளர்கள் தத்தமது நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அலுவலக ஊழியர்களின் திடீர்ப் பரிசோதனையின் போது முத்திரையிடப்படாது பாவிக்கப்படும் நிறுவை, அளவைகள் கண்டு பிடிக்கப்பட்டால் தகுந்த நடவடிக்கை உடன் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)


### தேவை

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் பேக்கரி ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலைஆள்கள்தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்.
ப. நே- 9.30-12.00,
2.00-4.30

வைரவர்
கோயில் பின்புறம்,
தலையாழி
யாழ்ப்பாணம்.

(53019)


### மானிப்பாய் அரசினர்மருந்தகத்தில்

## நோயாளர் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

சண்டிலிப்பாய், பெப். 1

மானிப்பாய் அதிகாரி செல்லமுத்து வீதியிலுள்ள மானிப்பாய் அரசினர் மத்திய மருந்துச் சாலையிலும், உடுவில் அரசினர் மத்திய மருந்துச் சாலையிலும் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த வாரம் முதல் திடீரென அதிகரித்துள்ளது.

மானிப்பாயில் கடந்த ஏழு வருடமாக இடம் பெயர்ந்து இயங்கிவந்த தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை கடந்த வாரம் தெல்லிப்பழை துர்க்காபுரத்திலுள்ள கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே இப் பகுதி நோயாளர்கள் மானிப்பாயிலுள்ள அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கும், உடுவில் அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கும் அதிகளவில் சிகிச்சை பெற வருகின்றனர்.

இதேவேளை மானிப்பாய் அரசினர் மத்திய மருந்துச் சாலை பொறுப்பதிகாரியான டாக்டர் தற்போது லீவில் சென்றுள்ளதால் உடுவில் அரசினர் மத்திய மருந்துச் சாலைபொறுப்பதிகாரியான டாக்டரே காலையில் உடுவிலும், பிற்பகலில் மானிப்பாயிலுமாக இரு இடங்களிலும் கடமையாற்றி வருகின்றார்.

(ஐ-135)

## வரட்சியால் வயல்களுக்கு நீர் பாய்ச்சும் விவசாயிகள்!

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் வரட்சி காரணமாக கதிர் வந்த நெற்பயிர்கள் கருகியுள்ளன. டிசம்பர் மாத இறுதியிலும் ஜனவரி மாதத்திலும் போதியளவு மழை பெய்யாததினால் ஐந்துமாத, ஆறுமாத விளைச்சலையுடைய நெல்வயல்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிணறு வசதியுள்ள விவசாயிகள் தங்கள் நெற்பயிர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீர் பாய்ச்சி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

(ஐ-135)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 10 | 05 |
| — | — |
| 08 | 12 |
| — | — |
| 1950 | 1997 |

### அமரர் தம்பிஐயா இரவீந்திரன்
(ஆசிரியர்)

அப்பாவைத் தேடி அன்றுமுதல் இன்றுவரை
அலைகின்றோம் அழுகின்றோம்!
எப்போதாயின் எம்கண்ணீர் சொரியின்
எடுத்துடன் அணைத்திடுவீரே!
இப்போ நாம் விடுகின்ற உப்புநீர் கண்டும்
இன்னும் பேசாதிருத்தல் முறையா?
தப்பாயுமைச் சுட்டாரே! தந்தையே ஞாயமா?
தரணியில் காண்போமா? என்று?
முப்போதும் தொழுவோம் முக்கண்ணிறைவா!
மீண்டும் எம் அப்பாவைத் தா.

எமது குடும்பத் தலைவரின் மரணக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அஞ்சல் தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலி அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், [02-02-1998) நாளை திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், அம்மா,
சகோதர சகோதரிகள், மைத்துனர்,

போக்கத்தை,
கைதடி வடக்கு,
கைதடி.

(53021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் முத்து பொன்னம்பலம்

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 25-12-1914
அமரத்துவம்: 02-01-1998

எண்பத்திநான்கு ஆண்டுகள் இப்பூமியில் தடம் பதித்து யாவருக்கும் சிக்கல்கள் வந்தபோது மெய் வருத்தம் பாராது தீர்த்து வைத்த எம்மவரே! எம் துயர் யார் தீர்ப்பர் என நாம் நெஞ்சுருகின்றோம். எனினும் உம் ஆத்மா சாந்தியடைய உம் குலதெய்வத்தை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் மறைவையொட்டி இறுதிக் கிரியையில் பங்கு கொண்டோருக்கும், அனுதாபமடல் அனுப்பியோருக்கும் எமது நன்றியை நவில்வதோடு அன்னாரின் 01-02-98 இல் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையில் பங்கு பற்றி பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

திருமதி தே. முத்துராசா
கெருடாவில்,
தொண்டமானாறு.

(53013)

# புனரமைப்பு வேலை பூர்த்தி

அரியாலை, பெப்.1

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் யாவும் முடிவடைந்துள்ளன.

நிலையத்தின் கட்டட திறப்பு விழாவை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நிலைய செயலாளர் சச்சிதவநேசன் தெரிவித்தார்.

(ஜ-17)


## றெறாசோ ஷிப்ஸ் (Terrazzo Chips)

★ கலர் பவுடர்
(Pigments)
[Holland and Germany]

★ வெள்ளை சிமெந்து
(Asano)

★ கதவுப் பூட்டுகள்
(Union English)
(Direct Importers)

**றம்சன்ஸ்**
இல: 443
பழைய சோனகத்தெரு
கொழும்பு - 12
தொலைபேசி:
431511, 434411



சித்த மருத்துவ ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்றது
ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர்
கேட்டு வாங்கிப் பயன் பெறவும்.
தயாரிப்பாளர்கள்
**ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ்**
கைதடி (52934)


நிர்வாகக்குழு உறுப்பினர்களை

# புகைப்படம் எடுத்தல்

எமது ஒன்றியத்தின் அனைத்து நிர்வாகக்குழு உறுப்பினர்களும் 02-02-98 (திங்கள்) பிற்பகல் 4.00 மணிக்கு (புதிய நேரம்) பல்கலைக்கழக வளாகத்துக்கு தவறாது சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

செயலாளர்
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(53017)

# 31-ம் நாள் நினைவலைகள்

எமது பாடசாலை தொண்டர் ஆசிரியை
செல்வி ஜெயராணி சாமுவேல்
அவர்களின் அன்புத் தாயார்


## திருமதி இரத்தினம் சாமுவேல்

அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(சி2762)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் பொன்னையா நாகராசா

(ஓவசியர் ஒட்டுசுட்டான்)

தோற்றம்: 13-05-1934
மறைவு: 01-01-1998

வானவில்லின் வண்ணங்கள் ஏழாய்,
இனிமை பயக்கும் இனிய சுரம் ஏழாய்,
தவமுள்ள தவசியர் தாம் ஏழாய்,
வளமுடன் வாழ்ந்திருந்தோம்,
நாம் ஏழாய்--- அப்போது.
கொம்பியூட்டர் கொண்டு தானையா,
கொண்டு சென்றான் காலனிங்கு.
'சப்த'ங்களிரு 'திஸ்'டங்களாகி,
பொலிவிழந்து, புவி இழந்து,
போகுதற்கு இடமின்றி
ஆண்டில் ஓர் மாதம் அழிந்ததையா.
பெண்டிர் பிள்ளைகள் சுற்றமாய்
பிரார்த்திக்கின்றோமே- உம்
ஆத்மா சாந்திஅடைய--- இப்போது.

குடும்பத்தினர்.

சங்கம் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(53002)

உ
ஸ்ரீராம ஜெயம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ சர்வமங்கள ஈசுர வருஷம் தைத்திங்கள் 20 ஆம் நாள் [02-02-98] திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 9 மணி 30 நிமிடம் முதல் 10.30 வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| வேலணை சிவஸ்ரீ<br>நா. யோகீஸ்வரக்குருக்கள்<br>அவர்களின் புத்திரன்<br>சிரஞ்சீவி<br>**ரஞ்சிதசர்மாவிற்கு** | சிவஸ்ரீ<br>இ. கணேசசர்மா<br>அவர்களின் புத்திரி<br>சௌபாக்கியவதி<br>**ரமாராணியை** |

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் நிகழத் திருவருள் துணை கொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. மேற்படி முகூர்த்தம் யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: காலை 6.30 மணி தொடக்கம் 7.30 வரை மணமகன் இல்லத்தில் நடைபெறும்,

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி<br>நா. யோகீஸ்வரக்குருக்கள்<br>சுபதராம்பிகையம்மா தம்பதிகள்<br>இல. 41, புதுவீதி,<br>அத்தியடி, யாழ்ப்பாணம். | திரு. திருமதி<br>இ. கணேசசர்மா<br>இராஜலக்சுமி அம்மா<br>இல. 46, ராணி வீதி,<br>நல்லூர், யாழ்ப்பாணம். |

[52846]


## மீண்டும் அளவெட்டி தெற்கில்

# கதிர்காமசிங்கம் சன்

02 - 02 - 1998 திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் உள்ள சுபநேரத்தில் எமது வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

(52914) உரிமையாளர்: க. சொர்ணவடிவேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) புறோயிலர் தினந்தோறும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.141, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(52950)

புறோயிலர் (Broiler) இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். தொடர்பு: இல. 101, பலாலிவீதி, (இலுப்பையடிச் சந்தி அருகில்), கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[52983]

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[53012]

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ், சேவல் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: NO 68, Old Park Road, Jaffna.
(52990)

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler), இறைச்சிக்குகந்த கோழி (Gull Bird) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.15, 6 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்)
(52995)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: (5), 17 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் பிரதான வீதிக்கும் இடையில்).
[53000]

### சைக்கிள் திருட்டு

யாழ் நகரப்பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருநகர் சின்னக்கடை சந்தையில் புதிய சைக்கிள் திருட்டுப் போயுள்ளது. (ஐ-30)

---

பெண்களுக்கு உகந்தது

**T. V. S.SUZUKI**

**Scooty - Motor Cycles**

Brand New - புதியது

(60 cc)

விற்பனையாளர்:

## பிரிமியர் ஓட்டோ மோட்டிவ்

338, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(குருடீசல் என்ஜினியேஸ் கட்டடம்)
(53001)

---

## விற்பனையாகின்றது

**BRIGHT BOOKS**

நாமும் சுற்றாடலும் (திருத்திய பதிப்பு) ஆண்டு 1 – 5 வரை
நாமும் சுற்றாடலும் - செயல் நூல் ஆண்டு 1—5 வரை
மொழிவிருத்தி - செயல் நூல் ஆண்டு 1—5 வரை
கணிதம் - ஆண்டு 2 – 5 வரை
புதிய பாஷைப் பயிற்சி விளக்கம் - ஆண்டு 1—5 வரை

யாழ்ப்பாணத்தில் எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.
(52978)

---

யா / மீசாலை

## விக்கினேஸ்வரா ம. வி.

ஆண்டு ஐந்து
புலமைப்பரிசில் பரீட்சை 1997
சித்தியடைந்த மாணவர்களை
வாழ்த்துகின்றோம்

1. செல்வி எஸ். காயத்திரி — 120 புள்ளி
2. செல்வி என். றோகினி — 120 புள்ளி
3. செல்வன் எஸ். மயூரன் — 112 புள்ளி
4. செல்வி கே. நதிக்கா — 108 புள்ளி
5. செல்வி எஸ், பிரவீனா — 101 புள்ளி
6. செல்வன் ரி, தர்மசீலன் — 98 புள்ளி
7. செல்வி எஸ். கிரிஷா — 95 புள்ளி
8. செல்வன் ஆர். புவீந்திரன் — 94 புள்ளி

மேற்படி மாணவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம்

பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை, உறுப்பினர்கள்,
(53009)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி
நாவலர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட

### திரு. இளையதம்பி புஸ்பராஜா

அவர்களின்

மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— அயலவர்கள்

நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி.
(53015)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பொன்னுத்துரை செல்வலஷ்சுமி

தோற்றம்: ?8-04-1931
மறைவு: 02-01-1998

இன்று நடைபெறவுள்ள இவரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், நண்பகல் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
(52912)

---

## நத்தார் அதிர்ஷ்டலாபச் சீட்டு

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன கிறிஸ்தவ கழகத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டின் முடிவுகள் பரிசு பெறும் இலக்கம் வருமாறு:

1 ஆவது 4607
2 ஆவது 3486
3 ஆவது 452

ஆறுதல் பரிசு பெறுவோரின் இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1) 2432 | 2) 5393 | 3) 3066 | 4) 7019 |
| 5) 9001 | 6) 1289 | 7) 4881 | 8) 9!2 |
| 9) 3476 | 10) 4634 | | |

எதிர்வரும் 8-2-98 ஞாயிற்றுக்கிழமை எமது கழகத்தில் வந்து 10.00 மணிக்கு பெற்றுக்கொள்ளவும்.

செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்
426, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(53310)

---

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

## கும்பாபிஷேக தினம்

(மணவாளக் கோலம்)

## மாக சங்காபிஷேகம் (1008)

மேற்படி சங்காபிஷேகம் 07—02—98 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ஊர்ப்பொதுவாக நடைபெறவிருக்கும் இவ்வபிஷேகத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு அடியார்கள் வழமைபோல் பண உதவி செய்வதோடு, அபிஷேகத்திற்குத் தேவையான பச்சையரிசி, பயறு, சர்க்கரை, பழவகைகள், இளநீர், பால், தயிர், நெய், தேன் போன்றவற்றை ஆலயச் செயலகத்தில் உரிய காலத்தில் ஒப்படைக்கவும்.

தர்மகர்த்தா சபையினர்

(52984)

---


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வ மங்களகரமான ஈசுர வருடம் தைத் திங்கள் 19 ஆம் நாள் (01 - 02 - 1998) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-48 மணி முதல் 1-12 மணி வரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் மீனலக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

திரு, திருமதி
சோமநாதன்
('பூம்புகார்' புங்குடுதீவு 10)
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சதீஸ்குமார்**
(சதீஸ்)
அவர்கட்கும்



திரு திருமதி
துரைஐயா
(நுணாவில், சாவகச்சேரி)
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சிவறோகினி**
(றோகினி)
அவர்கட்கும்

புங்குடுதீவு கண்ணகி அம்மன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்:

**Riesbach, Seefeldstrasse 93 8008 Zurich Switzerland**

(Zurich புகையிரத நிலையத்திலிருந்து Tiefen Brunen நோக்கிச் செல்லும் 4ஆம் இலக்க Tram இல் தரிப்பிடம் Feldeggstrasse விற்கு அருகில்)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!

திருமதி சோமநாதன்
குடும்பத்தினர்
ஜேர்மனி

திரு. திருமதி துரைஐயா
குடும்பத்தினர்
இலங்கை

மற்றும் உறவினர், நண்பர்கள்

இரு வீட்டார் அழைப்பு
(53007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## ராஜதந்திர முயற்சிகள் தோல்வி

# வளைகுடாவில் போர் மேகம்!

லண்டன், பெப். 1

ஐ. நா. ஆயுத பரிசோதனைக்கு பக்தாத்தை எவ்வாறு இணங்க வைப்பது என்ற விடயத்தில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இணக்க நிலை ஏற்படாததை அடுத்து வளைகுடா நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது.

ராஜதந்திர ரீதியான முயற்சிகள் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் மெடலின் ஆல்பிரைட் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் பிறிமகோவ்வுக்கும் மெடலின் ஆல்பிரைட்டுக்கும் இடையே மட்றிட்டில் சுமார் இரண்டரை மணிநேரம் பேச்சு வார்த்தை நடைபெற்று முடிந்தது. ஆனால் இணக்க நிலை எதுவும் ஏற்படவில்லை.

நெருக்கடியைத் தீர்க்க ராஜதந்திர முயற்சிகளில் இன்னும் தாம் உறுதி பூண்டிருப்பதாக பிறிமகோவ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஈராக் மீதான எந்த ஒரு தாக்குதலையும் ரஷ்யா எதிர்க்கும் எனத் தெரிவிக்கும் அவசர செய்தி ஒன்றை அவர் அரபு லீக்கின் தலைமைச் செயலருக்கு அனுப்பியுள்ளார்.

இதற்கிடையில்—

ஈராக் மீது படைபலம் பிரயோகிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு பற்றி அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் பிரெஞ்சு அதிபர் சிராக்குடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இதேவேளை ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைக்காக அமெரிக்கா தனது வான்பிராந்தியத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்போவதில்லை என்று துருக்கி தெரிவித்துள்ளது. ஈராக்கிற்கு எதிராகத் தனது வான் பகுதியைப் பயன்படுத்த இஸ்ரேலுக்கு அனுமதி வழங்க ஜோர்தானும் மறுத்துள்ளது. ஈராக் மீதான இராணுவ நடவடிக்கை ஏற்புடையதல்ல என்று ஈரான் கூறியுள்ளது. எல்லாத் தரப்பினரும் நிதானத்துடன் செயற்படவேண்டும் என்று ஐ நா.வுக்கான சீன தூதர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## கைதிகளுக்குவிச ஊசிஏற்ற டாக்டர்கள் முன்வர கூடாது

### சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

லண்டன், பெப். 1

நச்சு மருந்து கொண்ட ஊசியை ஏற்றுவதன் மூலம் மரண தண்டனை வழங்கும் பொறுப்பை டாக்டர்கள் ஏற்கக் கூடாது என்று சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டிருக்கிறது.

டாக்டர்களின் தொழில் கோட்பாடுகளை இந்த மரண தண்டனை மீறுகின்றது என்று மன்னிப்புச் சபை குரல் எழுப்பி உள்ளது.

ஒருவர் மீது மரணதண்டனை விதிப்பதே தவறானது. அது நிறைவேற்றப்படும் விதங்களும் தவறானவை என்று சர்வதேச மன்னிப்புச் சபை வாதிட்டு வருகிறது.

மரண தண்டனையை நிறைவேற்றும் வழிமுறைகளில் மிகவும் மனிதப் பண்புடையது விஷ ஊசி ஏற்றும் முறையே என்று கூறப்படும் கருத்துக்களை அது நிராகரித்துள்ளது.

### உலக அரங்கில்

வலி, நோ எதுவும் தெரியாமல் துரிதமாக மரணத்தைக் கொண்டு வருவதற்கு இந்த விஷஊசி முறை பல சந்தர்ப்பங்களில் தவறி உள்ளது என்றும் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மரண தண்டனையை நிறைவேற்றும் ஊசிமருந்தை ஏற்ற டாக்டர் ஒருவர் மறுத்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதை அவரது மருத்துவக் கழகம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அது கேட்டிருக்கிறது.

அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 38 மாநிலங்களிலும் மற்றும் சீனா, தாய்வான் ஆகிய நாடுகளிலும் விஷ ஊசி மூலம் மரணதண்டனை நிறைவேற்றும் முறை அமுலில் இருந்து வருகிறது. (ஐ)

## காங்கிரஸை விட்டு பந்த் விலகினார்

### பி. ஜே. பிக்கு அவர் ஆதரவு

புதுடில்டி, பெப். 1

காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் மத்திய அமைச்சருமான கே.பி. பந்த் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிவிட்டார்.

ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அவர் ராஜீவுக்கு மிகவும் நெருக்கமானவராக விளங்கினார்.

பொதுத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான இந்து தேசியவாத பாரதீய ஜனதாக் கட்சியை தாம் ஆதரிக்கப்போவதாக சீதாராம் கேசரிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பந்த் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக் ஸ்திரத்தன்மை அவசியமாகுகிறது. எனவே தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சியை ஆதரிக்க வேண்டியது தற்போது அவசியமாகவுள்ளது எனத் தாம் கருதுவதாகவும் திரு பந்த் கூறியுள்ளார்.

கே.பி.பந்தின் மனைவி உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடுகிறார். (ஐ)

## ஈரானில் கோர பஸ் விபத்து

தெஹ்ரான், பெப். 1

ஈரானின் மேற்குப் பகுதியில் உள்ள நகரம் ஒன்றில் இரசாயனப் பொருள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றுடன் பஸ் ஒன்று மோதியதில் இடம்பெற்ற விபத்தில் பஸ் பயணிகள் 33 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 13 பேர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் பலரும் தீக்காயங்களுக்கு ஆளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சீனாவில் சுரங்கவிபத்தில் 70 பேர் பலி

பீஜிங், பெப். 1

வடகிழக்கு சீனாவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வாயுவெடி விபத்தில் குறைந்தது 70 பேர் பலியாகினர் பலர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய அதிகாரிகள் தீவிர விசாரணை மேற் கொண்டுள்ளனர். (ஐ)

## ஹெலி விபத்தில் பாதுகாப்பு அமைச்சர் மரணம்

கிகாலி, பெப். 1

புறூண்டியின் பாதுகாப்பு அமைச்சர் கொலோனல் பெர்மின் சின்சோபியா ஹெலிக்கொப்டர் விபத்தில் பலியானார். கடந்த புதனன்று காலநிலை சீர்கேடு காரணமாக இந்த விபத்து நேர்ந்தது.

புறூண்டியில் நடைபெறும் சிவில் யுத்தம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு [illegible] திரும்பும் வழியிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. (ஐ)

## சுஹார்ட்டோ கோரிக்கை

ஜகார்த்தா, பெப். 1

இந்தோனேசிய ஜனாதிபதி சுஹார்ட்டோ நாட்டின் 20 கோடி மக்களையும் அமைதியாக இருக்கும் படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## அறிவித்தல்

இத்தால் அறியத்தருவது சா. கணேசலிங்கத்திற்கு உரிய யாழ்ப்பாணம் இல. 356, K. K. S. வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் அறை வாடகைக்கு எடுத்துள்ளவர்கள் எங்களை உடனடியாக வந்து சந்திக்குமாறு வேண்டுகின்றேன்.

உரிமையாளர்:
சா. கணேசலிங்கம்
273, கே. கே. எஸ். றோட்,
கொக்குவில்.

(53022)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



ஒளிதந்தது:
21 – 01 – 1931
ஒளி இழந்தது!
02 – 01 – 1998

### திருமதி இரத்தினம் சாமுவேல்
(உடுவில்)

''எம்மை விட்டு உன் நினைவைப்பிரிக்கமுடியுமா?''

அன்பான அன்னையே! அருளீந்த எம் இரத்தினமே!
உமது உயிரது பிரிந்து போனாலும்
உம் நிழலில் எங்களுக்கு ஆறுதல் காட்டி
எம்மை வழிகாட்டு அம்மா!
மரணத்துயரில் கலந்து பங்கேற்ற அனைவருக்கும்
எம் நன்றிகள்!

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தம்பி, தங்கை.

மானிப்பாய் வீதி, உடுவில்.

(53020)

### தெல்லிநகர்
## காசிவிநாயகர் தேவஸ்தானம்
### புனராவர்த்தன அஷ்டபந்தன
# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கருணைமிகு காசிவிநாயகர் தேவஸ்தானம் புதுப்பிக்கப்பட்டு, புதுவர்ணம் தீட்டப்பெற்று ஸஸ்திஸ்ரீ நிகழும் ஈசுர வருடம் தை மாதம் 27 ஆந் திகதி (09 - 02 - 98) திங்கட்கிழமை 9.35 மணி முதல் 10.06 வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய மீனலக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீகாசி விநாயகப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகட்கும் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதால் அடியார்கள் அன்றும் அதற்கு முதல் ஒன்பது நாள்கள் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து விநாயகர் திருவருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்றுச் சிறப்புற வாழ்வார்களாக

### கிரியா நிகழ்வுகள்

( 1 - 2 - 98 ) ஞாயிற்றுக்கிழமை
பகல் 11 மணி 36 நிமிடமளவில் குருஹோரையில் கும்பாபிஷேகக் கிரியையாரம்பம், விநாயக வழிபாடு, அனுக்ஞை, திரவியசுத்தி, திரவியவிபாகம், கணபதிஹோமம்.

( 2 - 2 - 98 ) திங்கட்கிழமை
பகல் 12 மணி கிராமசாந்தி, பிரவேசபலி.

( 3 - 2 - 98 ) செவ்வாய்க்கிழமை
12 மணி ரட்சோத்னஹோமம், திசாஹோமம்

( 4 - 2 - 98 ) புதன்கிழமை
12 மண மூர்த்திஹோமம், சம்ஹிதாஹோமம்.

( 5 - 2 - 98 ) வியாழக்கிழமை
பகல் 12 மணி நவக்கிரகஹோமம், வாஸ்துசாந்தி

( 6 - 2 - 98 ) வெள்ளிக்கிழமை
பகல் 12 மணி மிருத்தசங்கிரணம், கடஸ்தாபனம், தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம்.

( 7 - 2 - 98 ) சனிக்கிழமை
காலை 8 மணி யாகபூஜை, பக்தர்கள் எண்ணைக் காப்பு ஆரம்பம். மாலை 3 மணி யாகபூஜை தீபாராதனை

( 8 - 2 - 98 ) ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணி திரவியஹோமம் எண்ணைக் காப்புப்பூர்த்தி, மாலை 3 மணி பிம்பசுத்தி ரட்சாபந்தனம் நியாசங்கள்.

( 9 - 2 - 98 ) திங்கட்கிழமை
காலை 7 மணிக்கு புண்ணியாகவாசனம் தொடர்ந்து மஹாபூர்ணாகுதி, யாகதீபாராதனை கும்பவீதி பிரதட்சனம் 9 மணி 35 நிமிடத்தில் தூபி அபிஷேகம் 10 மணி 06 நிமிடத்துக்குள் மஹாகும்பாபிஷேக தர்சனம், ஆசாரிய சம்பாவனை மஹாபிஷேகம் தீபாரதனை திருவீதியுலா, பிரசாதம் வழங்கல்.

ஷெ ஆலய பிரதம சிவாச்சாரியாரும்
உபயகாரர்களும்.

காசி விநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

[சி/2764]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மீதான தாக்குதலை இந்தியா சகிக்க மாட்டாது!

## அதிபர் கிளின்ரனுக்கு குஜ்ரால் கடிதம்

புதுடில்லி, பெப் .2

ஈராக்கிற்கு எதிராகப் புதியதொரு யுத்தத்தை கட்டவிழ்த்துவிட வேண்டாம் என்று இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் அமெரிக்க அதிபரிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக இந்தியாவின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை அவர் கிளின்ரனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்கு வங்காள இடதுசாரிக் கட்சிக்கும், ஐக்கிய முன்னணிக்கும் தேர்தலில் பெருவெற்றி கிடைக்க வேண்டும் என வாழ்த்துவதற்காக கல்கத்தாவில் திரண்ட பல்லாயிரக் கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பிரதமர் குஜ்ரால் உரையாற்றினார். அச்சமயம் ஈராக் மீதான தாக்குதலை நடத்த வேண்டாம் என்று கேட்டு தாம் அதிபர் கிளின்ரனுக்குக் கடிதம் எழுதியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா ஈராக்கிற்கு எதிராக மீண்டும் வலுச் சண்டைக்குப் போவதை இந்தியா சகித்துக் கொள்ளாது.

அரேபியர்கள் பாரம்பரியமாகவே இந்தியாவின் நண்பர்கள். இந்தியாவின் வணிகத்துறை சடுபாடுகள் மத்திய கிழக்கில் உள்ளன. அரேபியர்கள் மீது கொலை வெறி கொண்ட இன்னொரு தாக்குதல் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மத்திய கிழக்கில் போர் வெடிக்குமானால் அது தற்போது அங்கு பணிபுரியும் 20 லட்சம் இந்தியர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும்.

—இவ்வாறு குஜ்ரால் தமது உரையில் தெரிவித்தார்.

அமெரிக்கா மீது நெருக்குதல் கொடுக்குமாறு கேட்டு ரஷ்யா, சீனா உட்பட ஐந்து முக்கிய நாடுகளின் தலைவர்களுக்கு தாம் கடிதம் எழுதியுள்ளதாகவும் குஜ்ரால் தெரிவித்தார். (ஐ)

## 90 கோடி மக்களுக்கு வெளிநாட்டவர் பிரதமரா?

### வெட்கக்கேடு என்கிறார் ஜெயலலிதா



சென்னை, பெப். 2

வெளிநாட்டவர் எவரும் இந்தியாவின் பிரதமராக வருவதை தமது கட்சி எதிர்க்கும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்தார்.

இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி ஆகியோர் மீது தாம் பெருமதிப்பு வைத்துள்ளதாகவும், ஆனால் 90 கோடி மக்கள் உள்ள நாட்டில் வெளிநாட்டவர் ஒருவர் பிரதமராவது வெட்கக்கேடான விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் சோனியாகாந்தியே பிரதமர் ஆவார் என்று சீதாராம் கேசரி தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து ஜெயலலிதா இவ்வாறு கூறியுள்ளார். (ஐ)

கற்களை வீசிய பொதுமக்கள் மீது

## இந்திய ராணுவம் சுட்டு காஷ்மீரில் 8 பேர் பலி!

ஸ்ரீநகர். பெப். 2

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதைத் தடுக்க முயன்ற பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்தனர்; 40 பேர் காயமடைந்தனர்.

முஸ்லிம்களின் புனித தினமான றம்ழான் தினத்தன்று தோடா மாவட்டத்தின் ஒதுக்குப் புறமாக உள்ள கிராமம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தீவிரவாதிகளைக் கைது செய்வதற்காக தமது வீடுகளை படையினர் சோதனையிடுவதை எதிர்த்து கற்களை வீசிய மக்கள் மீது படையினர் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர் மாநில அரசு இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

அகாலிதள் கட்சியின் பிரசார மேடைகளில் உரை:

## பிரதமர் குஜ்ராலிடம் விளக்கம் ஐக்கிய முன்னணி கோரியுள்ளது

புதுடில்லி, பெப். 2

அகாலி தளத்தின் தேர்தல் மேடைகளில் பிரதமர் குஜ்ரால் உரையாற்றக் கூடாது என ஐக்கிய முன்னணி பிறப்பித்த உத்தரவை மீறியதற்காக பிரதமர் குஜ்ராலிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இது குறித்து ஐக்கிய முன்னணியின் பிரமுகர்கள் கருத்துத் தெரிவிக்கையில் — ஜலந்தர் தொகுதிக்கு வேட்மனுத் தாக்கல் செய்யும் வேளையில் பிரதமர் குஜ்ரால் அகாலிதளம், பாரதீய ஜனதாக்கட்சிப் பிரமுகர்களுடன் கூடவே சென்றுள்ளார். இதற்காக எமது ஆட்சேபனைகளை பிரதமரிடம் தெரிவித்தோம், பஞ்சாப்பின் நலனுக்காக ஐக்கிய முன்னணி பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பிரதமர் குஜ்ராலை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் இம்மாநில மக்களுக்கு உள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறும் அகாலி தள் கட்சியின் தேர்தல் கூட்ட மேடைகளில் தோன்ற வேண்டாமென பிரதமர் குஜ்ராலுக்கு தாம் பல தடவை தெரிவித்திருந்தும் எமது வேண்டுகோள்களை பிரதமர் மீறிவிட்டார். இது குறித்து அவர் எமக்கு விரிவாக விளக்கமளிக்க வேண்டும் — எனத் தெரிவித்துள்ளார்கள். (ஐ-8)

**இந்தியச் செய்திகள்**

### சுவரொட்டி ஒட்டிய மூவர் கைது

சென்னை, பெப். 2

ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பான தீர்வை எதிர்த்து பெரம்பூர் சுரங்கப்பாதை அருகே வெள்ளிக்கிழமை இரவு சுவரொட்டிகளை ஒட்டிய மூவரை பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

### நடிகை லதா திண்டுக்கலில் போட்டி

சென்னை, பெப். 2

தமிழ்நாட்டில் காங்கிரஸின் கூட்டணிக் கட்சியான போட்டி அ.தி.மு.க. ஐந்து மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடவுள்ளது. இதில் நடிகை லதா திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடுகிறார். (ஐ)

### சீ. பி. ஐ. இயக்குநராக டீ. ஆர். கார்த்திகேயன்

புதுடில்லி, பெப். 2

மத்திய புலனாய்வுத் துறையின் (சீ. பி ஐ.) இயக்குநராக டீ. ஆர். கார்த்திகேயன் நேற்று பொறுப்பேற்றார்.

சீ. பி. ஐ. இயக்குநர் ஆர். கே. சர்மாவின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்தே கார்த்திகேயன் அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கை புலன்விசாரணை செய்த சிறப்பு விசாரணைக் குழுவுக்கு கார்த்திகேயன் தலைவராக இருந்தார். (ஐ)

### பி. ஜே. பி வெற்றிபெற இராமேஸ்வரத்தில் யாகம்!

புதுடில்லி, பெப். 2

இந்தியப் பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றவும், வாஜ்பாய் பிரதமராக வரவேண்டியும் இராமேஸ்வரத்தில் உள்ள அருள்மிகு ராமநாத சுவாமி ஆலயத்தின் அருகே யாகம் ஒன்றை நடத்த அக்கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

20 வேத விற்பனர்கள் இந்த யாகத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த யாகத்தைத் தொடர்ந்து நாட்டில் உள்ள எல்லா சிவ தலங்களிலும் யாகங்களை நடத்தவும் பி ஜே. பி. திட்டமிட்டுள்ளது. (ஐ)

ஊழியர்கள் போராட்டத்தால்

## உள்நாட்டு வெளிநாட்டு விமான சேவை இந்தியாவில் சீர்குலைவு

புதுடில்லி. பெப். 2

விமானப் போக்குவரத்துக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப்போராட்டம் காரணமாக இந்தியா முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவைகள் சீர்குலைந்துள்ளன.

நிலைமை நெருக்கடியாக உருவெடுத்ததை அடுத்து சிவில் விமானப்போக்குவரத்துத் துறை அமைச்சர் இப்ராஹிம் நேற்று முன் தினம் இரவு விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஊழியர் சங்கப்பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான சேவைகளை மிகமோசமாகப் பாதித்துள்ள இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை அமுல் செய்யப்போவதாக அரசு எச்சரித்துள்ளது.

இந்தியாவிலுள்ள சுமார் 650 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் சம்பளக் கோரிக்கை குறித்தும் மற்றும் பல விடயங்கள் குறித்தும் இந்தக்காலவரையறையற்றவேலை நிறுத்தப்போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். (ஐ-8)

### போராட்டம் இடைநிறுத்தம்

இந்தியாவில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் அமைப்பு தனது வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்ததாக பிந்திக் கிடைத்தசெய்திதெரிவித்தது.

மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சீ. எம். இப்ராஹிமின் கண்காணிப்பின் கீழ் விமானத் துறை நிர்வாகத்தின் [illegible] [illegible] தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. [ஐ]

## தேர்தலைக் குழப்ப பாகிஸ்தான் சதி!

### இந்தியா குற்றச்சாட்டு

இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை குழப்ப பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ எஸ். ஐ. வெளிநாட்டுக் கூலிப் படையினரை நாட்டுக்குள் அனுப்ப முயற்சித்து வருவதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

கடினமான மலைப் பகுதிகளில் அமைந்த பாதைகள் வழியாக கூலிப்படைகளை இந்தியாவுக்குள் அனுப்ப ஐ. எஸ். ஐ. முயன்று வருவதாக மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்ததாக பீ. ரீ. ஐ. செய்தி கூறுகிறது.

ஜம்மு காஷ்மீர் வழியாக கூலிப்படைகளை அனுப்ப தீவிரவாதிகளுக்கு ஐ. எஸ். ஐ. அமைப்பு பெருந்தொகை நிதி வழங்குவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.


## சிறப்பாகப் பாராட்டுகின்றோம்

பிரபல பாடசாலையான

யா/ஹாட்லிக் கல்லூரி

நடத்திய 1998 ஆம் ஆண்டுக்கான ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றிய இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுள் அதிஉச்சப் புள்ளி (174) யைப் பெற்று முதலாவதாகச் சித்தியடைந்த

யா/கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை

மாணவன்

செல்வன் அருந்தவராசா ஆதித்தன்

1997 ஆம் ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சையிலும் 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரையும், அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்
யா/ கற்கோவளம்
மெ. மி. த. க. பாடசாலை,
பருத்தித்துறை.

(சி/2778)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடிகளை அகற்ற உதவுமாறு இணையம் மீண்டும் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கு உதவுமாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகளிடம் மீண்டும்வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிதிவெடிகள் அகற்றுவது தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த நவம்பர் மாதம் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்தது.

இந்த முறைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு மிதிவெடிகள் அகற்றுவதில் நிபுணத்துவம் பெற்ற ஜேர்மனியைச் சேர்ந்த ஜேர்காட் போர்மன் என்பவர் யாழ்ப்பாணம்வந்து ஆய்வொன்றை மேற்கொண்டார்.

இவரின் ஆய்வினைத் தொடர்ந்து உடனடியாகக் குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மூன்று மாத காலமாகியும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை. இதனால் ஒவ்வொரு மாதமும் சராசரி பத்துப் பேர் வரை பாதிக்கப்படுவதுடன் பல கால்நடைகளும் பலியாகின்றன. இதனை புள்ளி விவரங்களுடன் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மிதிவெடிகளை உடனடியாக அகற்றவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

யாழ். குடாவில் சுமார் 10 ஆயிரம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டு இருக்கலாம் என்று ஐ. நா. அபிவிருத்தித்திட்ட தலைமையகம் மதிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

# குப்பையைக் கிளற கிரனேட் வெடித்தது

## வெல்லம்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, பெப். 01

கொழும்பு, வெல்லம் பிட்டியில் கடந்த புதனன்று நண்பகல்குப்பைக்குள் கிடந்து கிரனேட் ஒன்று வெடித்தது.

இச் சம்பவத்தில் பேப்பர் வியாபாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

கழிவுப் பேப்பர்களை விற்பனை செய்யும் மேற்படி வியாபாரி கழிவு குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் குப்பைகளை கிளறிக்கொண்டிருக்கையில் குப்பைக்குள் கிடந்த கிரனேட் வெடித்தது.

(இ-21)

# கிராமிய வைத்தியசாலைக்கு நிரந்தர அதிகாரி இல்லை

சண்டிலிப்பாய், பெப். 1

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாத நிலையில் செயற்பட்டு வருகின்றது. தற்போது வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்துச் சாலை பொறுப்பதிகாரியான டாக்டரே இங்கு வாரத்தில் மூன்று தினங்கள் மட்டும் வந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார். மாதகல், சில்லாலை, வடலியடைப்பு, பிரான்பற்று பெரியவிளான், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கான ஒரே ஒரு வைத்தியசாலையாக இந்த வைத்தியசாலை உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கம் உட்பட பல பொது அமைப்புகள் சுகாதாரப் பகுதியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை இப்பகுதியில் தனிப்பட்ட வைத்தியம் செய்து வந்த பிரபல தனியார் வைத்தியர்களும் கடந்த யுத்தகால அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். இதனால் இப்பகுதி மக்கள் தகுந்த வைத்திய சிகிச்சைகளை பெறமுடியாது அவதிப்படுகின்றனர். (ஐ-135)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். வண். வடகிழக்கு அருள்மிகு கொண்டலடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியது.

தினமும் பிற்பகல் 2 மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து விநாயகப் பெருமான் உள் வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

பிரதம குருவாக வேதசிவாகமஜோதி சிவஸ்ரீ நா. பால சுப்பிரமணியக் குருக்கள் கிரியைகளை நடத்துவார்.

(இ-7)

★ ★ ★

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கள் காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். (இ-7)

★ ★ ★

கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பாலஸ்தாபனக் கிரியைகள் தொடங்கி நாளை திங்கட்கிழமை காலை 6 45 மணிக்கு ஆலய மூலமூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

எழுதுமட்டுவாள் விழுபழை அருள்மிகு ஸ்ரீமீனாட்சி அம்பாள் தேவஸ்தான மஹா சங்காபிஷேகம் நாளை திங்கள் காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்: கிரியா கலாமணி சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்கள் தலைமையில் பல குருமார்கள் கலந்து கொண்டு சங்காபிஷேகக் கிரியைகளை நடத்துவர்

(ஐ-7)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ ஆலயங்களில் நாளை திங்கட்கிழமை காலை "ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் பெருவிழா" நடைபெறும் (ஐ-30)

★ ★ ★

நல்லூர் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோயிலில் நாளை திங்கட்கிழமை காலை முத்துக்குமாரசாமி ஷஷ்டித் திருவிழா விசேட அபிஷேகம். பூசை ஆராதனை வழிபாடுகளுடன் இடம்பெறும்.

★ ★ ★

கோண்டாவில் - திருவலயம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் கோவிலில் நாளை திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு விசாலாட்சி - விசுவநாதருக்கு விசேட சங்காபிஷேகம், பூசைவழிபாடுகள் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மணவாளக்கோல நவோத்திர சங்காபிஷேகம் நடைபெறும். சுவாமி வீதி உலா வருவார்.

★ ★ ★

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெறவுள்ளது. முற்பகல் 10-30 மணிக்கு 108 கலச சங்காபிஷேகமும்மாலை பெருமான் உள் வீதி உலாவும் இடம்பெறும்.

ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ சபேசக்குருக்கள் (வசந்த ஐயர்) தலைமையில் திருவிழா நடைபெறும். (ஐ 30)

# அமைச்சரவையில் இருந்தும் அனுருத்த விலக வேண்டும்

கொழும்பு, பெப். 1

அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பாதுகாப்புத் துறை பிரதி அமைச்சர் பதவியை மட்டுமல்ல அமைச்சரவையிலிருந்தும் முற்றாக இராஜினாமாச் செய்யவேண்டும்.

ஐ தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் கருணாசேன கொடித்துவக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் பதவி தொடர்பான போட்டி காரணமாக தனது திறமையை வெளிர் காட்ட வேண்டுமென அவர் விரும்புகின்றார்.

சுதந்திரப் பொன் விழா வைபவம் கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்டதன் மூலம் தலதா மாளிகையை புலிகளின் இலக்குக்குள்ளாக்கி விட்டார்.

யாழ். தரைப்பாதை திறப்பு தொடர்பாக அவர் பல தடவைகள் காலக்கெடு தெரிவித்தார். அவரது காலக்கெடுவை பாதுகாப்பு, அரசியல் நிலைவரம் புரிந்தவர்கள் பொருட்படுத்துவதில்லை.

சுதந்திரதினத்துக்கு முன்பு பாதை திறக்கப்படும் என்றார். தற்போது பதவி துறந்துள்ளார். சில வேளை தான் பதவியில் இருந்திருந்தால் பாதை திறந்திருப்பேன் என்று கூறினாலும் ஆச்சரியப்பட முடியாது.

அவர் பதவி துறக்கவேண்டுமென ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சாராரும் மனு தயாரித்ததாக அறிகின்றேன். இது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது.

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்டதாக பெருமைப்படுகின்றார். ஆனால் விடுதலைப் புலிகள் நாட்டின் சகல இடங்களிலும் ஊடுருவி விட்டார்கள் —என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-21)

# தலதாமாளிகை சம்பவம் குறித்து சமாதான ஆணைக் குழு கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 31

கண்டி தலதாமாளிகை மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக தலதாமாளிகையில் பிரதம குருவுக்கு யாழ். மறை மாவட்ட நீதிசமாதான ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புத்த பெருமானின் புனித தந்தம் வைக்கப்பட்டிருக்கும் கண்டி தலதா மாளிகையைத் தகர்க்கும் முயற்சியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் எமக்குப் பெரும் [illegible] யைத் தந்துள்ளது [illegible] பவத்தினால் புண்பட்டுள்ள கோடிக்கணக்கான பௌத்த மத சகோதரர்களின் துன்பத்தில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

இப்படியான தாக்குதல்கள் பயங்கரமானதும் துன்பம் தருபவையாக இருப்பினும், எம்மத்தியில் புரையோடிப் போய்விட்ட ஆழமான தீமைகளின் அறிகுறிகளே இவைகள் என்பதையும் நாம் கருத்தில் கொண்டு, இவ்வகையான தீமைகளின் அடிவேரையே அறுத்தெறியும் விதத்தில் நீதியுடன் கூடிய சமாதானம் எம்மண்ணில் மலரநாம் அனைவரும்எம்மை [illegible] மாகின்றது — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

தை 20

திங்கட்கிழமை

திதி: ஷஷ்டி

நள்ளிரவு 12.03 வரை.

நட்சத்திரம்: ரேவதி

முன்இரவு 8.52 வரை.

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 12 36 2.06

ராகுகாலம் 8.06 9.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# உதயன்

## தேர்தலின் பின்னர்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிவுகளும் வெளியாகி விட்டன.

அரசியல், பொருளாதார, வாழ்வு உரிமைகள் இல்லாத நாம் வாக்குரிமை கொண்டு எதனைச் சாதித்து விட முடியும் என்ற மனப்பாங்கே மக்களிடம் பரவலாகக் காணப்பட்டது. ஆயினும் அவர்கள் கடைசி நேரத்தில் தம்மை மாற்றிக் கொண்டார்கள் என்பதனை விட அற்ப சலுகைகளுக்காக அவ்வாறு மாற்றப்பட்டார்கள் என்பதே பொருத்தமானது ஆகும்.

தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் அதனையே ஊர்ஜிதம் செய்கின்றன. முறைப்பாடுகளை சம்பந்த கட்சிகளின் தலைவர்கள் ஒரேயடியாக மறுத்துவிட்டபோதிலும், தேர்தலன்று மாலையில் நடந்தவற்றுக்கு யாழ்ப்பாணத்து மக்களே சாட்சிகள்!

யாழ்ப்பாணத் தமிழர்களின் அரசியல் இந்தளவு கேலிக் கூத்துக்கும், தாழ் நிலைக்கும் போய்விட்டதே என்று பலரும் கவலை தெரிவிக்கிறார்கள். அது ஒருபுறமிருக்க...

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியே தீரவேண்டும் என்று விடாப்பிடியாக நின்ற அரசாங்கத்துக்குப் பெரும் வெற்றி கிடைத்திருக்கிறது. தமிழ் தலைமைத்துவங்களின் மத்தியில் உள்ள பிளவைப் பயன்படுத்தி அவர்கள் மீது எதனையும் திணிக்கலாம் என்பதனை அரசு இப்போது புரிந்திருக்கும்; மகிழ்ச்சியும் கொள்ளும்.

அந்த வகையில் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு விருப்பம் கொண்டுள்ளதை வாக்காளர்களில் சுமார் அரைவாசிப்பேர் சமிக்ஞை காட்டியுள்ளனர் எனலாம்.

தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் —

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்; ஜனநாயகம் நிலைக்க உழைத்தல்; இனப் பிரச்சினைக்கு அரை குறைத் தீர்வை எதிர்த்தல்; அரசியல் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தல், மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் ஜனநாயகச் சூழலை மலரச் செய்தல்; பீதியை நீக்கி பாதுகாப்பை நிலை நிறுத்துதல் — என்று பல வகைக் கொள்கைகளை முன் வைத்திருந்தன.

எனினும் மக்கள் அவற்றில் எதனை நாடி வாக்களித்தார்கள் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது. எல்லாக் கட்சிகளுக்கும் வாக்குகள் விழுந்து ஆசனங்கள் கிடைத்துள்ளன. அதனால் மக்கள் ஜனநாயகத்துக்கும், போர் நிறுத்தத்துக்கும் நியாயமான தீர்வுக்கும் வாக்களித்துள்ளார்கள் என்று பொதுவாகக் கொள்ளலாம்.

அரசாங்கம் இந்தத்தேர்தலை யாழ்ப்பாண மக்களின் விருப்பம் என்ன என்பதனைக் கண்டறிவதற்காகவே நடத்தியதெனில் போரை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனையடுத்து தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய நீதியான, நியாயமான, முழு அளவிலான தீர்வு ஒன்றையக் கொண்டு வருவதற்கான அரசியல் அணுகு முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

தமிழர் பிரதேசத்தில் அமைதியும் ஜனநாயகமும் மலர வேண்டுமெனில் இனப் பிரச்சினைக்குத் தமிழர்களுக்குத் திருப்தி தரும் தீர்வு காணப்படுதல் அவசியம். அபிவிருத்தி என்று கூறி வெளிநாட்டுக்கடன் பெறுவதற்கு தேர்தல் நடத்திய வெற்றியை அரசு பயன்படுத்தக்கூடாது.

# மகப்பேற்றுப் பிரிவு திறக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப். 1

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் சத்திர சிகிச்சைக் கூடம், மகப்பேற்று சிகிச்சைப் பிரிவு என்பன விரைவில் திறக்கப்படவுள்ளன.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் மற்றும் பிரிட்டிஷ் அரசின் உதவியுடனே மேற் குறிப்பிட்ட வைத்திய பிரிவுகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# திருவாசகம் சுவாமிகளின் குரு பூசை

கொழும்பு, பெப், 1

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 10ஆவது ஆண்டு குருபூசை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் சி. தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்து கலாசாரத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன்பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

(ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலை மருத்துவ சேவை நேர்முகப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம், பெப். 1

இடைநிலை மருத்துவ சேவைக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை திங்கட்கிழமை, காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கீழ்வரும் பரீட்சார்த்திகள் பிறப்புச்சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, வாக்காளர் இடாப்பு, வதிவிடச் சான்றிதழ், கல்வித் தகைமை பற்றிய உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் சகிதம் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பொது சுகாதார பரிசோதகர்

எஸ். பிரபாகரன், (குளத்தடி வீதி, சங்கானை) எஸ். மதிவண்ணன் (கரணவாய் வடக்கு, கரவெட்டி), ரி. மகமூர்த்தி (மே/பா கே. பஞ்சரட்ணம், நில அளவையாளர் திணைக்களம் வவுனியா) கே. பரதசிவம் (மே/பா எஸ். கிருஷ்ணகுமார், 5 ஆம் வட்டாரம், குமுழமுனை, முள்ளியவளை), கே. சியோன் மே/பா எஸ். சிவகுரு, புத்தூர்ச்சந்தி, மீசாலைவடக்கு, கொடிகாமம்), ஆர். கமலசுமணன் (104/3), திருவையாறு கிளிநொச்சி), பி. சக்திக்குமார் (8, இராஜதுரை வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா), என். அமிர்தலிங்கம் மே/பா எஸ். விதானையார், கைதடி தெற்கு, கைதடி), கே. தயானந்த (மே/பா கிருஷ்ணசாமி, ஐயனார் வீதி, பருத்தித்துறை), எஸ். கௌரிபாலன் (நீர்ப்பாசன திணைக்கள விடுதி, 5 ஆம் வாய்க்கால், பரந்தன்).

ஆய்வுகூட

தொழில் நுட்பவியலாளர்

செல்வி ஞானசக்தி (சிவன் கோயில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி).

(ஐ-8-ரீ)

## வவுனியாவில் நால்வர் கைது

வவுனியா, சைவப்பிரகாச வித்தியாலய நலன் புரி நிலையத்தில் தங்கியிருந்த 4 பேர் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண்டிக்குளம் பிரதேசத்தில் மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## கோழிகளுக்கு தூக்க நோய்

குருநகர். ஒடக்கரை வீதியில்லுள்ள கோழி வளர்ப்போரின் சிலகோழிகள் தூக்க நோயால் இறந்துள்ளன.

கோழி வளர்ப்போர் கோழி நோய்த் தடுப்பு மருந்து கொடுத்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

(ஐ-30)

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலிஸாரின் சடலமே இது எனத் தெரியவருகிறது.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதாகவும் சடலத்தின் முதுகுப்புறத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டதாகவும் மீனவர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-15-5)


விற்பனைக்கு

வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன-புதிய

SANYO - 3 LCP
COLOUR
PROJECTOR

உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு:
திரு. M நூரி
114, ஏ.வி. றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(52930)



எமதுபுத்தம் புதிய வீடியோ CD வெளியீடு

முரளி, சூர்யா, ரஸிகா

★ காதலே நிம்மதி ★

(ஒறிஜினல் CD)

புதிய படங்களை வீடியோ CD யில் உடனடியாக வெளியிடும் நாம் தற்பொழுது புதிய படமான 'காதலே நிம்மதி' என்னும் படத்தை வெளியிட்டுள்ளோம்.

என்றும் தரமான வீடியோ CD பிரதிகளுக்கு:

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.

(சி/2766)



உ

இமையாணன் - துவாளி

அருள்மிகு

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான
புனராவர்த்தன சம்புரோக்ஷண
மகாகும்பாபிஷேக
விஞ்ஞாபனம்

ஐங்கரன் மெய்யடியார்களே!

அருள் பாலித்து வரும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொடித்தம்பத்திற்கும் நிகழும் ஈசுர வருடம் தைமாதம் 20ஆம் திகதி (1998-02-02) திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 7 மணி தொடக்கம் 7 மணி 48 நிமிடம் வரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்தத்தில், பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P. தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

- பரிபாலன சபை.

(52328)


## நெலுக்குளம் பகுதியில் தேடுதல்

வவுனியா, பெப். 1

பழுதடைந்த வான் ஒன்றைத் தள்ளிக் கொண்டுவந்தசிலர் அவ்விடத்திற்கு பொலிஸ் ஜீப் ஒன்று வந்தபோது வானை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு தப்பி ஓடினர்.

வவுனியா நெலுக்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்துப் பொலிஸார் அப்பகுதியில் கடுமையான தேடுதலை நடத்தி வருகின்றனர்.

(இ-164-9)

## பக்தாத்தில் தங்கியுள்ள ஐ. நா. பணியாளர்கள் இடம் மாறுகின்றனர்

பக்தாத், பெப் 1

பக்தாத்தில் தங்கியுள்ள ஐ. நா. நிவாரணப் பணியாளர்கள் தத்தமது வதிப்பிடங்களில் இருந்து வெளியேறி ஹோட்டல்களில் சென்று தங்கத் தொடங்கியுள்ளனர்.

ஈராக் அரசு கேட்டுக் கொண்டதை அடுத்தே அவர்கள் தமது வதிவிடங்களை காலி செய்து வருகின்றனர்.

பணியாளர்களின் பாதுகாப்புக் கருதி இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவுக்கும் ஈராக்கிற்கும் இடையே இராணுவ மோதல் தவிர்க்க முடியாததாகிவிட்டது என்பதை இந் நடவடிக்கை காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

(ஐ)

# மருத்துவத்துறை அனுமதியில் யாழ்ப்பாண மாணவருக்கு அநீதி!

## வெட்டுப்புள்ளியைக் குறைக்குமாறு ஜனாதிபதிக்கு சிவா கடிதம்

யாழ்ப்பாணம் பெப். 1

97-98 கல்வியாண்டுக்கான மருத்துவத்துறை மாணவர்கள் அனுமதியில் யாழ். மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரம் ஜனாதிபதிக்கு நேற்று அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அக்கடிதத்தின் பிரதிகள் கல்வி அமைச்சருக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

97-98 கல்வி ஆண்டுக்குபல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் திட்டத்தின்கீழ்யாழ்மாணவர்களுக்கு மிகப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக மருத்துவத் துறைக்கு 27 மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். வெட்டுப் புள்ளி மிகக்கூடுதலாக—275 ஆக-உயர்த்தப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சூரியப்பிரகாசம் - 2 இராணுவ நடவடிக்கையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று பல நாள்களாக உணவோ உறையுளோ இல்லாது அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தவர்கள்- சுமார் 7 மாதங்கள் போதிய உணவோ இருப்பிட வசதியோ படிப்பதற்கு ஏற்ற வசதியோ இல்லாது அவர்கள் மிகவும் அல்லற்பட்டனர். அவர்களிடம் புத்தகங்கள் இருக்கவில்லை. விளக்குக் கொளுத்துவதற்கு மண் எண்ணெய் கூட இருக்கவில்லை. இருந்து படிப்பதற்கு வாங்கு தானும் இருக்கவில்லை.

1996 செப்ரெம்பரில் உயர் தரப் பரீட்சை இடம்பெற்ற போது அவர்கள் படிப்பதற்குப் போதிய கால நேரம் கிடைக்கவில்லை. அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பி வந்து பார்த்த போது தங்கள் வீடுகள் கூரை இல்லாதிருக்கவும் வீடுகள் பாதியாகவோ அல்லது முற்றாகவோ சேதம் அடைந்திருக்கவும் கண்டனர்.

வீட்டில் உள்ள பொருள்கள் கொள்ளையிடப்பட்டும் காணப்பட்டன. எனினும் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

கடந்த வருடம் வைத்தியத் துறைக்கு 65 மாணவர்கள் அனுமதி பெற்றனர் எந்தக் காலத்திலும் 45 மாணவர்களுக்கு குறைவாக மருத்துவத் துறைக்கு மாணவர்கள் தெரிவானதில்லை. இம்முறை அவர்கள் உரிய முறையில் தகுதி பெறாமல் இருப்பதற்கு மேற்கூறிய சூழ்நிலையே காரணமாகும்; எவ்விதத்திலும் இதற்கு மாணவர்கள் பொறுப்பானவர்களல்லர்.

கடந்த பல வருடங்களில் மிக உயர்ந்த வெட்டுப்புள்ளி இருந்த போதிலும் யாழ். மாணவர்கள் மிகத் திறமையாகத் தேர்ச்சியடைந்திருந்தனர்

இம்முறை அவர்களால் பரீட்சைக்கு ஆகக் குறைந்த அளவிலாவது ஆயத்தம் செய்ய முடியாதநிலை ஏற்பட்டிருந்தது.

ஆகவே யாழ்ப்பாண மாணவர்களின் வெட்டுப்புள்ளியைக் குறைக்குமாறும் அவர்களுடைய அனுமதியை மறு பரிசீலனை செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கின்றேன். விளைவிக்கப்பட்ட அநீதிகளை திருத்திக் கொள்வதற்கு இதுவே வழியுமாகும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## குடாநாட்டு..

(முதலாம் பக்கத் தொடர்)

கவனைக்குரியவை. அவர்கள் தமது கட்சிக் கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று மக்களின் தீர்ப்புகளைப் பெறமுன்வர வேண்டும்.

அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் பொய்யான பிரசாரங்கள் மூலம் ஈ.பி.டி.பி. யின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முற்பட்ட சக்திகளுக்கு மக்களின் தீர்ப்பு ஏமாற்றத்தை அளித்திருக்கும் என நாம் நம்புகிறோம்.

நாம் கைப்பற்றிய சபைகளில் தெரிவு செய்யப்பட்ட எமது அங்கத்தவர்கள், ஏனைய கட்சிகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுடன் இணைந்து மக்களின் துயர் துடைக்க உறுதியுடன் பங்களிப்புச் செலுத்துவார்கள் என்றுஉள்ளது.

(இ)

## தலதா...

(முதலாம் பக்கத் தொடர்)

வருடமும் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

★ குண்டுத் தாக்குதல் குறித்து விசாரிக்க சுதந்திர ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும்.

என்ற கோரிக்கைகள் உட் [illegible] அவர்கள் அங்கு சமர்ப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9-7-21)

# புலிகளைத் தடைசெய்ய பீரிஸ் கோரிக்கை

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யுமாறு பிரிட்டன் உட்பட பல நாடுகளைக் கோரி உள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை உத்தரவு வெளியான சமயம் அமைச்சர் லண்டனில் தங்கி இருந்தார்.

தடை உத்தரவு வெளியான மறுநாள் பிரிட்டிஷ் அரசு அதிகாரிகளைச்சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திய பிரிட்டனின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸையும் அமைச்சர் சந்தித்துப் பேசினார். (இ-21)

# சண்டிலிப்பாய் கோட்டத்துக்கு இலவசப் பாடநூல்கள்

சண்டிலிப்பாய், பெப். 1

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச்சேர்ந்த பாடசாலைகளுக்கு இவ்வருடத்திற்கான இலவச பாடப்புத்தகங்கள் நாளையும் நாளை மறுதினமும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் வைத்து வழங்கப் படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் வைத்து நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுமென்று சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ற. இருதயநாதன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை பன்றிஇலவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில்வைத்துபாடப் புத்தகங்கள் வழங்கப்படுமென்று அவர் தெரிவித்தார்.

## புதிய அரங்கு திறப்பு

யாழ். புனித றொக்ஸ் றோ.க. வித்தியாலயத்தில் புதிய அரங்கு ஒன்று அண்மையில் புனித ஆரோக்கியநாதர் ஆலயம் பங்குத் தந்தை ஆனந்தகுமாரனால் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

புதிதாக நிறுவப்பட்ட பாடசாலை பெயர்பலகையை அதிபர் ரீ.எஸ். பாலசுந்தரம் திறந்து வைத்தார். (ஐ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் [illegible] 01-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org